**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

ஜனவரி – பிப்ரவரி 2021

**A031 தமிழக வரலாறு**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. தென்னவன் என்ற சொல் யாரைக் குறிப்பிடுகிறது?
2. சங்ககாலத் தமிழகத்தில் கேரளமும் இணைந்திருந்தது என்று குறிப்பிடும் இலக்கண நூல் எது?
3. அசோகர் கல்வெட்டின் பெயர் என்ன?
4. நெடியோன் என்று பாராட்டப்பெற்ற மன்னன் யார்?
5. சங்ககாலத்தில் நூல் நூற்ற பெண்களை எங்ஙனம் அழைத்தனர்?
6. பல்லவர் காலத்தில் காஞ்சிக்கு வந்த சீனப்பயணி யார்?
7. எம்மண்டலமும் கொண்டருளியவன் என்ற பட்டப்பெயர் யாருக்குரியது?
8. வாய்க்கால் பாட்டம் எதற்காக வசூலிக்கப்பட்ட வரி?
9. வேலூர் கோட்டையைக் கட்டியவர் யார்?
10. ஏகோஜி எந்த மன்னரிடம் படைத்தலைவராக இருந்தார்?
11. ஐதர் அலியை எதிர்த்த ஆங்கிலேயப் படைத்தலைவனைக் குறிப்பிடுக?
12. முதல் சுதந்திரப் போராட்டம் என்று எதனைக் கூறுவர்?
13. கி.பி. 1909 இல் கையெழுத்தான உடன்பாட்டிற்குப் பெயர் என்ன?

14. சென்னை மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்ற பெயரைச் சூட்டியவர் யார்?
15. தனித்தமிழ் இயக்கத்தை நிறுவியவர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. கொல்லிமலை பற்றிய சிறப்புகளைக் கூறுக?
2. முரசு பற்றி சிறு குறிப்பு வரைக?
3. பல்லவர் கால அளவைகள் குறித்து எழுதுக?
4. முதலாம் இராசராசனின் நிர்வாகப் பணியினை விவரி?
5. பிற்காலச் சோழரின் கட்டடக்கலை பற்றி தொகுத்துரைக்க?.
6. நாயக்கர் கால சிற்றூர் ஆட்சிமுறையை விளக்குக?
7. மராட்டிய ஆட்சியின் அரசு அலுவலர்கள் பற்றி எழுதுக?
8. காமராசர் – குறிப்பு எழுதுக?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ.) சங்க இலக்கியம் சித்தரித்துள்ள ஐவகை நிலப்பாகுபாடுகளை விளக்கி வரைக?

(அல்லது)

(ஆ.) சங்க கால மக்களின் பொருளாதாரம் பற்றி விவரிக்க?

2. (அ.) பல்லவரின் கலைத்தொண்டு குறித்து கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ.) பிற்காலப் பாண்டியரின் நிர்வாகமுறையினை விரித்துரைக்க.

3. (அ.) நாயக்கர் கால வரிவிதிப்பு முறையினை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ.) விடுதலைக்குப்பின் தமிழகத்தில் ஏற்பட்ட இலக்கிய வளர்ச்சி குறித்தெழுதுக.

*** *